# 138 வது பாரதியார் பிறந்த நாள் விழா

11. 12.2019 அன்று தமிழ் துறை சார்பாக பாரதியார் பிறந்த நாளை சிறப்பிக்கும் விதமாக ஒன்று முதல் பதினொன்றாம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணணவியருக்கு ஓவியப்போட்டி மற்றும் அடுப்பில்லாமல் உணவு தயார் செய்தல் போட்டி நடத்தப்பட்டது. பாரதியாரின் 138 வது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக, ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள்138 பேர் பாரதியார் வேடமணிந்து வந்திருந்தனர். மாணவர்கள் பாடல் , கவிதை , உரையாடல் , பேச்சு என பாரதியின் புகழை எடுத்துக் கூறினர்.

**காலக்கணிதம்**

- கவிஞனாகியநான் ஒருகாலத்தைக் கணிக்கும் கவிஞானவேன்.

- உள்ளத்தில் தோன்றும் உண்மைப் பொருளைஎல்லோருக்குதெரியும் படிவெளிப்படுத்துவேன் .
- இந்தபூமியில் நான் எல்லோராலும் போற்றப்படும் தெய்வமாவேன்,சரிஎன்றுசொன்னால் ஏற்பது,தவறுஎன்றுசொன்னால் எதிர்ப்பதுஎன் பணி
- ஆக்கல் அழித்தல் அளித்தல் ஆகிய மூன்றுபணிகளையும் இறைவனும் நானும் மட்டும் அறிநத்வையாகும். ஆதனைநீங்களும் அறிவிர்கள்.
- புணம் படைத்தசெல்வர்களிடத்தில் நான் சிறையிடப்படமாட்டேன். ஆட்சிஅதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் பயப்படமாட்டேன்.
- விருப்பம் தருவனஅனைத்தையும் பற்றிக் கொள்வேன். என்னிடம் இருந்தால் பிறருக்குஉண்ணக் கொடுத்து, இல்லையென்றால் நம்மவரின் இல்லத்தின் கதவுகளைத் தட்டுவேன்.
- முற்காலத்தில் வாழ்ந்தகம்பர்,பாரதியார்,பாரதிதாசன் போன்றகவிஞர்கள் கூறாதசிலகரத்துகளைக் கூறிடமுனைவேன்.
- என்னைபிறர் புகழ்ந்தால் என் உடல் சிலிர்ப்படையாது. பிறர் என்னை இழிவாகப் பேசினால் என் உள்ளம் மடிந்துவிடாது.
- மாற்றம் காண்பதுஎனதுமனிதத்தன்மையின் மகத்துவமாகும். மாறுகின்றஉலகின் மேன்மைகளைநான் அறிவேன்.
- ஆட்சிசெய்யும் தலைவர்கள் மாறுவர்.. ஆட்சிகள் மாறும். ஊண்டைஎன்றதத்துவமேமாறாததன்மைவாய்ந்தது.
- குறை கூறுபவர் குறை கூறட்டும். பேசியவார்த்தைஉடம்பைத் தொடாது.
- நானேதொடக்கம் நானேமுடிவுநானுரைப்பதுதான் சட்டம்.

ஞானம்

- சன்னலில் மரப்பலகைகைகள் ,மரச்சட்டங்கள் போன்றவறறைகாற்றானதுஉடைக்கும்.
- தெருவில் உள்ளபுழுதிசன்னலில் ஓட்டும்
- அவற்றின் மீதுகரையான் மண்ணால் வீடுகட்டும்.
- சன்னலைத் துடைத்து,வண்ணம் அடித்து,புதுக்கொக்கிகள் பொருத்தியபின்.
- காலங்கள் சென்றபிறகும் கையில் வாளியில் தண்ணீர் வண்ணத்தால் நிறப்பப்பட்டகுவளையும் கந்தைக்துணியுமாகசெயலாற்றும் என் வேலைஓயவில்லை,ஓய்வின்றிஉழைத்தால் தான் வாழ்வில் உன்னதநிலையைஅடையமுடியும் என்றுஆசிரியர் சன்னல் வாயிலாகஉணர்த்துகிறார்.

சித்தாள்

சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாதுபாடல் வழி நாகூர்ரூமி கூறும் கருத்தைவிளக்கு.

- இன்றையகாலம் பொற்காலமாகஉலகில் எல்வோருக்கும் அமைந்தாலும்,சித்தாளாகவேலைசெய்பவரின் தலையில் எழுதி இருப்பதோகற்களைச் சுமக்கும் காலம் மட்டுமே .
- பலபேர் தங்கள் வாழ்வுதொலைந்ததேஎன்றுதலையில் கைவைத்துப் புலம்புவர் பூமியில்.
- ஆனால் சித்தாளோதன் வாழ்வைத் தொலைக்காமல் பாரத்தைச் சுமந்துதன்னைக் காப்பதற்காய் தலையில் கை வைக்கிறாள்.
- வுாழ்வில் பணம்ஈபதவி,பட்டம் என்றுதலைக்கனம் பிடித்தவர்கள் உண்டு.
- ஆனால் சித்தானுக்கோதலையில் உள்ளகனமேவாழ்வாகஆகிப் போனது.
- அடுக்குமாடி,அலுவலகம் போன்றஉயர்ந்தகட்டடம் எதுவாயினும் அடுத்தவர்களுடையகனவுகளுக்காகஅலுக்காமல் சித்தாளுசுமக்கும் கற்களெல்லாம் அடுத்தவேளைஉணவுக்குத் தான்.
- உடல் சோர்வுற்று,வேதனைப் பட்டுபல இன்னல்கள் மத்தியில் சுமக்கிறார்கள்.
- அப்படிஉழைக்கும் சித்தாளுகளின் மனச்சுமையை,உணர்வற்றசெங்கற்கள் அறியப் போவது இல்லைஎன்றுஅழகாகவிளக்குகிறார்.